இன்றைய வேளாண் செய்திகள்
21.11.2012 P.M
22.11.2012 A.M

## மேட்டூர் நீர்மட்டம் குறைந்ததால் வறண்ட நிலத்தில் விவசாயம்



மேட்டூர் நீர்மட்டம் குறைந்ததையடுத்து, தண்ணீர் வெளியேறிய வறண்ட நிலத்தில் விவசாயிகள் உழவுப் பணிகளை தொடங்கியுள்ளனர்.

நிகழாண்டில் பருவ மழை போதிய அளவு பெய்யாததாலும், கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீர் திறக்கப்படாததாலும், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 719 கன அடியாகக் குறைந்துள்ளது.

இந்த நிலையில், காவிரி டெல்டா பாசனத்துக்காக அணையிலிருந்து தொடர்ந்து தண்ணீர் திறக்கப்படுவதால், அணையின் நீர்மட்டம் 56.85 அடியாக குறைந்துள்ளது.

இதனால், 60 சதுரமைல் பரப்பு கொண்ட மேட்டூர் அணை குளம்போல காட்சியளிக்கிறது. தண்ணீர் வெளியேறிய நிலத்தில் விவசாயிகள் உழவுப் பணிகளை தொடங்கியுள்ளனர்.

சேலம் மாவட்டம், பாலாறு, கோட்டையூர், பண்ணவாடி மற்றும் தருமபுரி மாவட்டம், ஏமனூர், ஒட்டனூர், நாகமரை ஆகிய மேட்டூர் பரிசல் துறை பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் சோளம், கம்பு, தர்பூசணி, வெள்ளரி போன்ற பயிர்களைப் பயிரிடத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 15 ஆண்டுகளில் இப்போதுதான் அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளதாக அந்தக் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

## நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற



இறைவை நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்று வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் துணை இயக்குநர் ந. மேகநாதன் கூறியது:

தருமபுரி மாவட்டத்தில் அதிகப் பரப்பளவில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்துப் பயிர் நிலக்கடலை. இப்போது, கார்த்திகைப் பட்டத்தில் (நவம்பர் 15 முதல் டிசம்பர் 15 வரை) இறவை நிலக்கடலை சாகுபடி செய்வதற்கு மிகவும் உகந்த பருவமாகும். இறவை நிலக்கடலையில் அதிக மகசூல் பெற நவீனத் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

நிலம், உழவு: மணல்பாங்கான வண்டல், செம்மண் மற்றும் கருவண்டல் நிலங்கள் நிலக்கடலை சாகுபடிக்கு ஏற்றவை. மண்ணின் தன்மைக்கு தகுந்தபடி 4 அல்லது 5 முறை இரும்புக் கலப்பை அல்லது நாட்டுக் கலப்பைக் கொண்டு கட்டிகள் நன்கு உடையும் வரை உழவு செய்ய வேண்டும். கடைசி உழவுக்கு முன்பாக ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இட வேண்டும்.

விதை: ஏக்கருக்கு சிறிய பருப்பு ரகங்களாக இருந்தால் 50 கிலோவும், பெரிய பருப்பு ரகங்களாக இருந்தால் 55 கிலோ விதையும் தேவைப்படும். விதை கடினப்படுத்துதல் என்ற தொழில்நுட்பத்தின் மூலம் முளைக்காத விதைகளை தனியாக அப்புறப்படுத்தி நல்ல முளைப்புத் திறன் உள்ள விதைகளை மட்டும் விதைப்பதன் மூலம் செலவைக் குறைக்கலாம்.

வறட்சியைத் தாங்கி விதைகள் முளைத்து வளர கால்சியோம் குளோரைடு என்ற ரசாயனக் கரைசலில் விதைகளை ஊற வைத்து கடினப்படுத்தி பின்னர் விதைக்க வேண்டும்.

செய்முறை: விதைகளைக் கடினப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் கால்சியம் குளோரைடு என்ற அளவில் 28 லிட்டர் தண்ணீரில் 140 கிராம் கரைத்து கரைசால் தயார் செய்து அதில் ஓர் ஏக்கருக்குத் தேவையான விதைகளை 6 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். ஊற வைத்த விதைகளை ஈரமான கோணிப்பை மீது பரப்பி மற்றொரு கோணிப் பையால் 24 மணி நேரம் மூடி வைக்க வேண்டும். பின்னர், மேலே மூடியுள்ள கோணிப் பையை நீக்கி சிறிதளவு முளைப்பு கண்ட விதைகளை தனியே பிரித்தெடுத்து நிழலில் உலர்த்த வேண்டும். இதேபோல, 2 மணி நேர இடைவெளியில் உலர்த்தி எடுத்து விதைப்பு செய்ய வேண்டும்.

பயன்கள்: விதைகளைக் கடினப்படுத்துவதன் மூலம் அவை வறட்சியைத் தாங்கி வளரும். விதைகளில் தண்ணீர் ஊடுருவும் திறன் அதிகரிக்கும். இளம் பயிர்களில் வீரியம் அதிகரிக்கும். பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க முடியும்.

உரமிடுதல்: இறவை நிலக்கடலைப் பயிருக்கு மண் ஆய்வு பரிந்துரையின்பேரில் உரம் இட வேண்டும். பொதுப் பரிந்துரையான 7 கிலோ தழைச்சத்து தரவல்ல 15 கிலோ யூரியா, 14 கிலோ மணிச்சத்து தரவல்ல 87.5 கிலோ சூப்பர் பாஸ்பேட், 21 கிலோ சாம்பல் சத்து தரவல்ல 35 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களுடன் 80 கிலோ ஜிப்சம் சேர்து அடியுரமாக இட வேண்டும்.

நிலக்கடலை நுண்ணூட்டக் கலைவயை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் 20 கிலோ மணலுடன் கலந்து விதைத்தவுடன் மேலாக தூவ வேண்டும். விதைத்து 40 முதல் 45 நாள்களில் 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைப்பதன் மூலம் தரமான காய்கள் உருவாகி நல்ல மகசூல் கிடைக்கும்.

பூ பிஞ்சு உதிர்வதைத் தடுக்கவும், நல்ல வளர்ச்சியடைந்த முழுமையான பருப்புகளைப் பெறவும் ஊட்டச்சத்துக் கலவையைத் தெளிக்க வேண்டும். இந்தக் கலவை தயாரிக்க டிஏபி 1 கிலோ, அம்மோனியம் சல்பேட் 400 கிராம் மற்றும் போராக்ஸ் 200 கிராம் ஆகியவற்றை 15 லிட்டர் தண்ணீரில் ஒன்றாக கலந்து இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும். மறுநாள் காலை இந்தக் கலவையை வடிகட்டினால் 13 லிட்டர் வரை தெளிந்த ஊட்டச்சத்து நீர் கிடைக்கும். இதை 187 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து 200 லிட்டர் தெளிப்பு திரவமாக தயாரிக்க வேண்டும். இந்தத் திரவத்துடன் 180 மி.லி. பிளானோபிக்ஸ் சேர்த்து விதைத்த 25 மற்றும் 35-ஆவது நாள்களில் தெளிப்பதன் மூலம் நிலக்கடலையில் அதிக மகசூல் பெறமுடியும் என்றார் அவர்.

**வட கடலோர மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும்**

வங்கக் கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வலுவிழந்ததால் வியாழக்கிழமை (நவம்பர் 22) தமிழகத்தின் வட கடலோர பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு வங்கக் கடலின் மத்திய கிழக்குப் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவானது. அந்த தாழ்வு மண்டலம் புயலாக மாறும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், புதன்கிழமை காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வலுவிழந்து, தீவிர காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாறியது. இந்த தாழ்வுப் பகுதி மேற்கு - தென்மேற்கு பகுதியில் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக, தமிழகத்தின் வட கடலோர மாவட்டங்கள் மற்றும் தென் ஆந்திரக் கடலோர பகுதிகளில் மழையோ அல்லது கனமழையோ பெய்யக்கூடும் என வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாநிலத்தின் பிற இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த 48 மணி நேரத்துக்குள் தீவிர காற்றழுத்தப் பகுதி மேலும் வலுவிழக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழையோ அல்லது இடியுடன் கூடிய கனமழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

புதன்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி - 70; பேச்சிப்பாறை - 60; பூதப்பாண்டி - 20; திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் - 50; செங்கோட்டை - 40; சிவகிரி - 30.

21st nov 2012 P.M

**நவீன வேளாண் இயந்திரங்கள் வாங்க மாவட்டத்துக்கு ரூ.99.30 லட்சம் ஒதுக்கீடு**

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் நவீன வேளாண் கருவிகளை வாங்கிப் பயன்பெற, ரூ.99.30 லட்சத்தை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் பேரியியல் மேலாண்மைத் திட்டம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.26.35 லட்சமும், இதர பிரிவினர்களுக்கு ரூ.72.95 லட்சமும் மானியமாக வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இயந்திர களை எடுப்பான், இயந்திரத் தெளிப்பான், நெல் நாற்று நடவுக் கருவி, விசை உழுவை (பவர் டில்லர்), சுழல் கலப்பை, நெல் அறுவடை இயந்திரம், 40 குதிரைத் திறனுக்குள்பட்ட டிராக்டர்கள், டிராக்டருடன் இணைத்து பயன்படுத்தப்படும் கருவிகள், மனித சக்தியால் இயக்கப்படும் கருவிகள் போன்ற கருவிகள் இத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட உள்ளது.

இத் திட்டங்களின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள், உரிய விண்ணப்பத்துடன் நிலத்தின் சிட்டா, அடங்கல், உணவுப் பொருள் வழங்கல் அட்டை நகல், புகைப்படம், சிறுகுறு விவசாயிக்கான சான்று ஆகியவற்றுடன் விவசாயி விரும்பும் வேளாண் இயந்திரம் கருவியின் விற்பனையாளரிடம் இருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களைப் பெறவும், மேலும் விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பும் திருவண்ணாமலை, போளூர், செங்கம், தண்டராம்பட்டு, கலசப்பாக்கம் வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் திருவண்ணாமலை, வேங்கிக்கால், நெ.1531, காஞ்சி சாலையில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற்பொறியாளரை அணுகலாம்.

ஆரணி, செய்யாறு, வந்தவாசி வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் ஆரணி, சைதாப்பேட்டை, நெ. 67, கார்த்திகேயன் சாலையில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளரை அணுகலாம் என்று மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே தெரிவித்துள்ளார்.

## தூத்து க்குடியில் நவ. 23-ல் கரும்பு விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

தூத்துக்குடியில் கரும்பு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (நவம்பர் 23) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கரும்பு விவசாயிகள் பயன் பெறும் வகையில், குறைதீர்க்கும் நாள் கூட்டம் நவம்பர் 23-ம் தேதி பகல் 11.30 மணிக்கு ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் ஆஷிஷ்குமார் தலைமையில் நடைபெறுகிறது.இதில் கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இடைத் தரகர்கள் குறுக்கீடு : திராட்சை உற்பத்தியாளர்கள் புகார்

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் திராட்சை விற்பனையில் இடைத் தரகர்களின் குறுக்கீட்டால், உற்பத்திப் பொருளுக்கு ஏற்ற விலை கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக, மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில், சுருளிப்பட்டி திராட்சை உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில், அதன் தலைவர் கி. முகுந்தன் தலைமையில் நிர்வாகிகள் அளித்த மனு விவரம்:

கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள சுருளிப்பட்டி, ராயப்பன்பட்டி, அணைப்பட்டி, நாராயணத்தேவன்பட்டி ஆகிய பகுதிகளில் 3000 ஏக்கர் பரப்பளவில் திராட்சை சாகுபடி நடைபெற்று வருகிறது. இங்கு உற்பத்தியாகும் திராட்சை பழங்களை மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் உள்ள வியாபாரிகளிடம் விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்து வந்தனர். கடந்த சில ஆண்டுகளாக திராட்சை விற்பனையில் இடைத் தரகர்களின் குறுக்கீடு அதிக அளவில் உள்ளது.

உற்பத்திப் பொருள்களை வியாபாரிகளிடம் நேரடியாக விற்பனை செய்ய விடாமல், விவசாயிகளை இடைத் தரகர்கள் தடுத்து வருகின்றனர். இடைத் தரகர்களின் தலையிட்டால், விவசாயிகளின் உற்பத்திப் பொருளுக்கு நியாயமான விலை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. திராட்சை விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருள்களை இடைத் தரகர்கள் குறுக்கீடின்றி வியாபாரிகளிடம் நேரடியாக விற்பனை செய்வதற்கு, மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அம்மனுவில் தெரிவித்துள்ளனர்.

## இயற்கை வேளாண் கண்காட்சி நவ. 29-இல் தொடக்கம்

பெங்களூரில் கர்நாடக அரசு வேளாண் துறை சார்பில், நவ.29-ஆம் தேதி இயற்கை வேளாண்மைக் கண்காட்சி தொடங்குகிறது.

இதுகுறித்து கர்நாடக வேளாண் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கர்நாடக அரசு வேளாண் துறை, பயோ ஃபெச் இந்தியா மற்றும் சர்வதேச இயற்கை வேளாண் மையம் சார்பில் பெங்களூரில் இயற்கை வேளாண்மைக் கண்காட்சி, நவம்பர் 29-ஆம் தேதி பெங்களூர் அரண்மனை திடலில் தொடங்குகிறது.

டிசம்பர் 1-ஆம் தேதி வரை நடைபெறும் இந்தக் கண்காட்சியில், இயற்கை வேளாண் விவசாயிகள், வேளாண் கருவி உற்பத்தியாளர்கள், இயற்கை வேளாண் விளைபொருள் விற்பனையாளர்கள் உள்ளிட்டோர் அரங்கம் அமைக்க உள்ளனர்.

இயற்கை வேளாண் விவசாயிகள், இயற்கை வேளாண் விளைபொருள் விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள் ஆகியோரை ஒருங்கிணைக்கும் நோக்கில் இந்தக் கண்காட்சி நடத்தப்பட உள்ளது. இதில் விவசாயிகளுக்கான பயிலரங்குகளும் நடத்தப்பட உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## முட்டை விலை உயர வாய்ப்பு

குளிர் காலம் தொடங்கியுள்ளதால் பர்வாலா, ஹைதராபாத் மண்டலங்களில் முட்டைக் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, நாமக்கல்லிலும் முட்டை விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாக, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அதன் தலைவர் பி.செல்வராஜ் வெளியிட்டுள்ள செய்தி:

கர்நாடக மாநிலத்திலிருந்து கேரளத்துக்கு முட்டைகள் கொண்டு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை கடந்த திங்கள்கிழமை (நவ.19) இரவுடன் விலக்கிக் கொள்ளப்பட்டு செவ்வாய்க்கிழமை முதல் கர்நாடக கோழி முட்டைகள் கேரளத்துக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால், கர்நாடகத்திலுள்ள முட்டை உற்பத்தி மையங்களில் முட்டைக் கொள்முதல் விலை உயர்ந்து வருகிறது.

இதற்கிடையே, வடக்கில் குளிர் தொடங்கியுள்ளதால் முட்டை விற்பனை அதிகரித்து பர்வாலா, ஹைதராபாத் மண்டலங்களில் முட்டைக் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டு வருகின்றன. இதையடுத்து, நாமக்கல்லில் முட்டைக் கொள்முதல் விலை திங்கள்கிழமை

10 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.3.10-ஆக நிர்ணயிக்கப்பட்டது. அத்துடன், தமிழகத்தில் காய்கறிகள் விலையும் அதிகரித்து வருவதால், வரும் நாள்களில் முட்டை விலை மேலும் உயரக்கூடும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிற மண்டலங்களில் நிலவும் முட்டைக் கொள்முதல் விலை:

ஹைதராபாத் ரூ.3.02, விஜயவாடா ரூ.2.97, பர்வாலா ரூ.3.14, சென்னை ரூ.3.10, மைசூர் ரூ.3.02, பெங்களூர் ரூ.3.05, மும்பை ரூ.3.34, தில்லி ரூ.3.25, கொல்கத்தா ரூ.3.25.

## புதிய ஒப்பந்த முறை : முட்டை உற்பத்தியாளருக்கு பாதிப்பில்லை

சத்துணவு திட்டத்துக்குத் தேவையான முட்டைகள் கொள்முதல் செய்வதில் தமிழக அரசு கொண்டு வந்துள்ள புதிய ஒப்பந்த முறையால் முட்டை உற்பத்தியாளர்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்று தமிழக கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் விளக்கமளித்துள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள சுமார் ஆயிரம் கோழிப் பண்ணைகள் மூலம் நாளொன்றுக்கு 3.50 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதில், தமிழக அரசின் சத்துணவு திட்டத்துக்கு தினசரி 60 லட்சம் முட்டைகள் வீதம் வாரத்தில் 5 நாள்களுக்கு 3 கோடி முட்டைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இதற்காக இதுவரை தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாதத்தில் கடைசி வாரத்தில் டெண்டர் விடப்பட்டு கோழிப் பண்ணையாளர்களுக்கு ஆர்டர்கள் அளிக்கப்படுகிறது.

தற்போது இந்த மாதம்தோறும் டெண்டர் விடப்படும் முறையில் மாற்றம் செய்யப்பட்டு, ஆண்டுக்கு ஒருமுறை தமிழகம் முழுவதும் ஒரே டெண்டராக நடத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இந்த புதிய ஒப்பந்த முறைப்படி டெண்டரில் பங்கேற்பவர்கள் ரூ.3 கோடி வைப்புத் தொகை செலுத்தவும், குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் ஏதேனும் ஒரு அரசுத் துறைக்கு உணவுப்பொருள் விநியோகம் செய்திருக்கவும், ஒரு ஆண்டில் ரூ.90 கோடிக்கு உணவுப்பொருள் விநியோகித்திருக்கவும் வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, 2013-ஆம் ஆண்டுக்கான முட்டைக் கொள்முதல் டெண்டர் சமூக நலத் துறை சார்பில், டிசம்பர் 10-ஆம் தேதி நடக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த புதிய ஒப்பந்த முறையால் சத்துணவுத் திட்டத்துக்கு முட்டை விநியோகிக்கும் முழு உரிமையை ஏதேனும் ஒரு பெரிய நிறுவனமே பெற முடியும். அவ்வாறு ஒப்பந்தம் பெறும் நிறுவனம் முட்டை உற்பத்தியாளர்களை அடிமைப்படுத்தும் முயற்சிகளும் அரங்கேறக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

இதுகுறித்து, பண்ணையாளர்கள் சிலர் கூறுகையில், அரசுத் திட்டத்துக்கு முட்டை விநியோகிக்கும் உரிமையை முட்டை உற்பத்தியாளர்கள் பரவலாக பெறும் வாய்ப்பை இந்த புதிய

ஒப்பந்த முறையில் மறுப்பதுடன், கடுமையான விதிமுறைகள் மூலம் பண்ணையாளர்கள் யாரும் இந்த ஒப்பந்தத்தில் பங்கேற்க முடியாமல், முட்டையே உற்பத்தி செய்யாத தனியொரு நிறுவனம் முட்டை விநியோக உரிமையை பெறக்கூடும். இது 20 சத முட்டை உற்பத்தித் தொழிலை தனிநபர் கையில் சிக்க வைக்கும் முயற்சி என்றனர்.

இருப்பினும், இத்தகைய குற்றச்சாட்டுகளை தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் மறுத்துள்ளது.

இதுகுறித்து அந்த சங்கத்தின் தலைவர் ஆர்.நல்லதம்பி திங்கள்கிழமை நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் கூறியது:

சத்துணவுத் திட்டத்துக்கு தினசரி தேவையான 60 லட்சம் முட்டைகளை ஒரே நிறுவனம் உற்பத்தி செய்ய முடியாது.

பல பண்ணையாளர்களிடம் பெற்றே வழங்க முடியும். அதனால், ஆண்டுக்கு ஒரே டெண்டர் முறையால் முட்டை உற்பத்தியாளர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

மாறாக தற்போது தமிழகத்தின் 6 மாவட்டங்களுக்கு ஆந்திர முட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன.

அந்த மாவட்டங்களுக்கும் தமிழக முட்டைகளே சென்று சேரவும் வாய்ப்புள்ளது. எனவே, சததுணவுத் திட்டத்துக்கு முட்டைக் கொள்முதல் செய்வது தொடர்பான தமிழக அரசின் கொள்கை முடிவுகளில் தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் தலையிடாது என்றார் அவர்.

## கரும்புக்கு காப்பீடு தொகை வழங்கக் கோரிக்கை

தானே புயலில் பாதிக்கப்பட்ட கரும்புக்கும் காப்பீடு தொகை வழங்க வேண்டும் என தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநாடு அண்மையில் நடைபெற்றது.

தலைவர் எல்.பாபு தலைமை வகித்தார். செயலர் கே.ஆதிமூலம் தீர்மானங்களைப் படித்தார். பொருளர் ஏ.ராமலிங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு விவசாயி சங்க மாவட்டச் செயலர் ஜி.ஆர்.ரவிச்சந்திரன் நிறைவுரையாற்றினார். முன்னாள் செயலர் வாழைக்கொல்லை ஆர்.பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

நவம்பர் 28-ம் தேதி ஈரோட்டில் நடைபெறும் மாநில மாநாட்டுக்கு 20 பேர் கொண்ட குழு செல்வது, கரும்பு வெட்டுக்கூலியை சர்க்கரை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும். எத்தனால் உற்பத்தி தொடங்கப்படாததால், அதற்காக பிடிக்கப்பட்ட பணத்தை சர்க்கரை ஆலை நிர்வாகம் திருப்பி வழங்க வேண்டும்.

கோட்டத்துக்கு 2 கரும்பு வெட்டு இயந்திரம் வழங்க வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் பாதகமான சி.ரங்கராஜன் குழு பரிந்துரைகளை மத்தியஅரசு அமல்படுத்த வேண்டும்.

சிதம்பரம் - காட்டுமன்னார்கோவில் காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் கூடுதலாக மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இன்றைய வேளாண் செய்திகள்

22.11.2012 A.M

விவசாய மலர்

## நடவு மானியம் 26ம் தேதிக்குள்வழங்க நடவடிக்கை : தாசில்தார்

திருத்துறைப்பூண்டி: நடவு மற்றும் உழவு மானியத்தை வரும், 26ம் தேதிக்குள் வழங்க வேளாண்துறை நடவடிக்கை எடுத்துள்ளது என்று, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தாசில்தார் தெரிவித்தார்.திருத்துறைப்பூண்டி தாலுகா அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கூட்டம், தாசில்தார் வைத்தியநாதன் தலைமையில் நடந்தது. இதில், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர் சிவசுப்பிரமணியன், பொதுப்பணித்துறை இளநிலை இன்ஜினியர்கள் கண்ணன், கார்த்திகேயன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஞானசேகரன், குணசேகரன் உள்பட பலர் பங்கேற்றனர்.கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது:தற்போது முள்ளியாறு, கோரையாறு, அரிச்சந்திரா நதி உள்பட அனைத்து ஆறுகளிலும், தொடர்ந்து விவசாய பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விட வேண்டும். தேசிய காப்பீடு திட்டம் டிச., 15ம் தேதிக்குள் நிறைவடைகிறது. இதற்குரிய சான்றிதழ்களை உடனே வழங்க வேண்டும். கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு உரிய கடனை வழங்க வேண்டும்.கொற்கை, தலைக்காடு நீர்மின் இரவை திட்ட உள்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்த வேண்டும். வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு மூவாயிரம் ரூபாய் வழங்க வேண்டும்.இவ்வாறு விவசாயிகள் பேசினர்.இதற்கு பதிலளித்து தாசில்தார் வைத்தியநாதன் பேசுகையில், ""உழவு மானியம், நடவு மானியம் விவசாயிகளுக்கு வரும், 26ம் தேதிக்குள் வழங்கப்படும் என, வேளாண்மைத்துறை அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர். விவசாயத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். மேலும் கூடுதல் தண்ணீர் பாசனத்துக்கு கிடைக்க கலெக்டரின் கவனத்துக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். டெங்கு காய்ச்சல் பரவுவதை தடுக்க, சொட்டுமருந்து அடிக்கவும் தேவையான நடவடிக்கையை மாவட்ட சுகாதாரத்துறை மூலம் எடுக்க ஏற்பாடு செய்யப்படும்," என்றார்

## விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு

திண்டுக்கல்:தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், மாவட்ட மாநாடு திண்டுக்கல்லில் நடந்தது. விவசாயிகள் சங்க மாவட்டத்தலைவர் ராஜரத்தினம் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் ராஜு முன்னிலை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் சண்முகம், பாலபாரதி எம்.எல்.ஏ., மாநிலத்துணைத்தலைவர் செல்வராஜ், ஒன்றியத்தலைவர் நேரு உட்பட பலர் பேசினர். மாநாட்டு

நிகழ்ச்சியில், மாவட்டத்துணைத்தலைவர் கருப்பணன் கொடியேற்றினார். மாநிலத்துணைத்தலைவர்கள் முகமதுஅலி, செல்வராஜ், விவசாய தொழிலாளர் சங்க மாவட்டசெயலாளர் குணசேகரன் கலந்துகொண்டனர். மாநிலத்துணைத்தலைவர் பாலகிருஷ்ணன் பேசினார். அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டா வழங்கவேண்டும். தொப்பம்பட்டியை தனித்தாலுகாவாக்கவேண்டும். விவசாயிகளுக்கு பயிர்கடன்கள் வழங்கவேண்டும். கூட்டுறவு தேர்தலை நியாயமான முறையில் நடத்தவேண்டும், என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட பொருளாளர் அஜய்கோஷ் நன்றி கூறினார்.

## தோட்டக்கலைத்துறை மானியம் கிடைப்பதில் சிக்கல்

கம்பம்:தோட்டக்கலைத் துறையில் உதவி இயக்குநர் பணியிடங்கள் காலியாக இருப்பதால், விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய மானிய உதவிகள்,திட்டப்பணிகள் செயல்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.தோட்டக்கலைத் துறையில் மறுசீரமைப்பு என்ற பெயரில் கூடுதல் பணியிடங்கள் உருவாக்கப்பட்டது. தற்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவிலும் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.தேனி மாவட்டத்தில் கம்பம் உதவி இயக்குநராக இருந்த செந்தில்குமார், கடமலைக்குண்டிற்கு மாற்றப்பட்ட பிறகு, கம்பத்தல் பணியிடம் காலியாக இருந்தது.இதை தொடர்ந்து, உத்தமபாளையத்தில் இருந்த உதவி இயக்குநர் ராஜன், கம்பத்திற்கு மாற்றப்பட்டார். இதனால் உத்தமபாளையத்தில் பணியிடம் காலியானது.

தற்போது உத்தமபாளையத்திற்கு, ராஜன் கூடுதல் பொறுப்பேற்றுள்ளார். மேலும் தற்போது காலியாக உள்ள சின்னமனூர் உதவி இயக்குநர் பணியிடத்தை, பெரியகுளம் உதவி இயக்குநர், கூடுதல் பொறுப்பாக கவனித்து வருகிறார்.
விவசாயத்துறையை காட்டிலும் தோட்டக்கலைத்துறையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. ஏராளமான மானியங்கள், கன்றுகள், உரம், பூச்சி மருந்துகள் வழங்கப்படுகிறது. மாவட்டம் முழுவதும் பல உதவி இயக்குநர் பணியிடங்கள் காலியாக இருப்பதால், விவசாயிகளுக்கு மானியங்கள் உரிய நேரத்தில் கிடைப்பதில் சிக்கல் நீடிக்கிறது. திட்டங்கள் செயல்படுத்துவதிலும், தொழில்நுட்பங்கள் வழங்குவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. மாவட்ட துணை இயக்குநர், காலியாக உள்ள உதவி இயக்குநர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## சிவகங்கையில் காய்கறி விலை உயர்வு

சிவகங்கை:சிவகங்கை வாரச்சந்தையில் காய்கறிகளின் விலை நேற்று உயர்ந்து காணப்பட்டது. சிவகங்கை வாரச்சந்தைக்கு, கோவை, ஒட்டன்சத்திரம், தேனி, சிவகங்கையை சுற்றியுள்ள

கிராமங்களில் இருந்து, காய்கறி வரத்து ள்ளன.தற்போது, வெங்காய வரத்து குறைந்துவிட்டது. அதே நேரம், கார்த்திகை மாதமாக இருப்பதால் காய்கறி தேவை அதிகரித்துள்ளது.விலை விபரம் (ஒரு கிலோ): தக்காளி - ரூ.20; சின்னவெங்காயம் - 45; பெரிய வெங்காயம் - 20; உருளை - 30; பீன்ஸ் - 40; கேரட் - 30.பீட்ரூட் - 30; கருணை- 20; முள்ளங்கி - 20; கத்தரி - 20; பட்டர் பீன்ஸ் - 80; சோயா பீன்ஸ் - 60; அவரை - 60; வெண்டை - 20க்கு விற்றன.

**விவசாயத்திற்கு மின்சாரம் இல்லை**

காரியாபட்டி:விவசாயத்திற்கு பயன்படும் வகையில், மின்சாரத்தை தொடர்ந்து வழங்க வலியுறுத்தி, காரியாபட்டி தாலுகா அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிட்டனர்.காரியாபட்டி பகுதியில், 2 ஆயிரம் ஏக்கரில் நெல் விவசாயம் பயிரிட்டுள்ளனர். கண்மாயில் இருந்த தண்ணீரை பாய்ச்சி, ஓரளவிற்கு பயிரை காப்பாற்றனர்.
போதிய மழை இல்லாததால், தற்போது கண்மாயில் தண்ணீர் இல்லை.

நெல் விவசாயம் பாதிக்கும் நிலை உள்ளது. நெற்பயிர்களை காப்பாற்ற, கிணற்று பாசனத்தின் மூலம், தண்ணீர் பாய்ச்ச போராடி வருகின்றனர். சீரான மின்சாரம் இல்லாததால் சிரமப்படுகின்றனர். பயிர்கள் கருகுகின்றன. அதிகாரிகளிடம் மனு கொடுத்தும், நடவடிக்கை இல்லை. 100க்கு மேற்பட்ட விவசாயிகள், காரியாபட்டிதாலுகா அலுவலகத்தை முற்றுகையிட்டனர். மதுரை தூத்துக்குடி ரோட்டில் மறியலில் ஈடுபட்டு," மின்வாரிய அதிகாரிகள் வந்தால்தான் செல்வோம்,' என்றனர். ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதித்தது.ஆர்.டி.ஓ.,குணசேகரன், அதிகாரிகளை வரச்சொல்வதாக கூறிய பின் கலைந்து சென்றனர். மாலை 4 மணிக்கு, மின்வாரிய மண்டல பொறியாளர் பாலசுப்பிரமணியன் தலைமையில், நிர்வாக அதிகாரி விஜயகுமார், தாசில்தார் ராஜா (பொறுப்பு) இன்ஸ்பெக்டர் மணிவண்ணன் முன்னிலையில், பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. உயர் அதிகாரிகளிடம் பேசி, இரு நாட்களில் தகவல் தெரிவிப்பதாக கூறினர். "சாதகமான முடிவு இல்லை என்றால், மீண்டும் போராட்டம் நடத்துவோம்,'என, விவசாயிகள் தெரிவித்தனர்.

**பொய்த்து வரும் பருவமழை , மின்தடையால்பிசான சாகுபடி பணிகள் தேக்கம்**

கடையநல்லூர்:பொய்த்து வரும் பருவமழை, கடுமையான மின்தடை தொடர்வதால் கடையநல்லூர் சுற்றுப்பகுதிகளில் பிசான சாகுபடிக்கான பணிகள் தேக்க நிலை அடைந்துள்ளன. ஆயிரக்கணக்கான ஏக்கர் பாசன நிலங்கள் தரிசாக விடக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் பரவலாக பெய்து வந்த போதிலும், கடையநல்லூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஒருசில நாட்கள் மட்டுமே பருவமழை எட்டிப்பார்த்தது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் வலிமையான பருவமழை இல்லாத காரணத்தால் கால்வாய்களில் தண்ணீர் வரத்து குறைவாகவே இருந்தது. ஆற்றுப்படுகைகளில் தண்ணீர்

வரத்தும் ஒருசில நாட்களுக்கு மட்டுமே காணப்பட்டது.

பருவமழை பெய்யத் துவங்கிய நிலையில் கடையநல்லூர் மற்றும் சுற்றுப்பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பிசான சாகுபடிக்கான ஆயத்த வேலைகளை துவக்கினர். கருப்பாநதி அணைக்குட்பட்ட பாசன நிலங்களில் பிசான சாகுபடிக்கான பணிகளை பொறுத்தவரை மிகவும் மந்தமாகவே காணப்பட்டது. இந்நிலையில் அணையிலிருந்து சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ள போதிலும் பெரும்பாலான பாசன நிலங்கள் பிசான சாகுபடிக்கு தயாராவதில் காலதாமதப்படுத்தப்பட்டு வருகின்றன.பருவமழை எதிர்பார்த்த வகையில் எட்டிபார்க்காமல் போய்விடுமோ என்ற அச்ச நிலையில் சாகுபடியை மேற்கொள்ள விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். நேரடி பாசன விவசாயிகள் மட்டுமின்றி கிணற்று பாசன விவசாயிகளும் பிசான சாகுபடியை மும்முரத்துடன் மேற்கொள்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர். கடையநல்லூர் வட்டாரத்தை பொறுத்தவரை ஏற்கனவே கார் சாகுபடி முறையாக மேற்கொள்ளப்படாத நிலையில் தற்போது பிசான சாகுபடியும் பருவமழை போதுமான அளவில் பெய்யாமல் இருந்து வருவதால் ஆயிரக்கணக்கான ஏக்கர் சாகுபடி நிலங்கள் தரிசாக விடக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.
கிணற்று பாசன விவசாயிகளை பொறுத்தவரை சாகுபடி செய்துள்ள பயிர்களை பாதுகாக்கும் வகையில் மின்சாரமும் தொடர்ந்து இல்லாத நிலை இருப்பதால் நடப்பாண்டு பிசான சாகுபடி என்பது கடையநல்லூர் வட்டாரத்தில் கேள்விக்குறியை ஏற்படுத்தும் என்ற நிலை தான் தற்போது நிலவி வருகிறது.

## உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை

ஆலங்குளம்:"உரங்களை கூடுதல் விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என ஆலங்குளம் வேளாண் அதிகாரி எச்சரிக்கை விடுத்துள்ளார்.
ஆலங்குளம் வட்டாரத்தில் தற்போது பிசான பருவ சாகுபடி துவங்கியுள்ளது. இந்நிலையில் வட்டாரத்தில் உள்ள உரக்கடைகள் மூலம் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படும் உரங்களை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் கூடுதல் விலைக்கு விற்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என ஆலங்குளம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் முத்துஎழில் தெரிவித்துள்ளார்.மேலும் உரக்கடைகளில் விற்பனை செய்யப்படும் உர விபரங்கள் அடங்கிய விலைப்பட்டியலை விவசாயிகளுக்கு தெரியும்படி பார்வையில் வைத்திருக்க வேண்டும். உரக்கடைகளில் இருப்பு விவரங்கள் சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். காலாவதியான பூச்சி மருந்துகளை விற்பனை செய்யக்கூடாது. வினியோகம் செய்யப்படும் உரம் மற்றும் பூச்சி மருந்துகளுக்கு உரிய ரசீது உடனுக்குடன் வழங்கப்பட வேண்டும் என அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**தூத்துக்குடியில் நாளை கரும்பு விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்ட கரும்பு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை (23ம் தேதி) நடக்கிறது. இதில் கரும்பு விவசாயிகள் திரளாக பங்கேற்குமாறு அழைப்பு விடப்பட்டுள்ளது.இது குறித்து தூத்துக்குடி மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகராஜ் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

தூத்துக்குடி மாவட்ட கரும்பு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை காலை 11.30 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ஆஷீஷ்குமார் தலைமையில் நடக்கிறது. இதில் கரும்பு விவசாயிகள் திரளாக கலந்து கொண்டு பயன்பெற வேண்டும்.இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒரு ஏக்கர் மூலிகை பயிர் சாகுபடி செய்தால் விவசா யிகளுக்கு ரூ. 1 லட்சம் கிடைக்க வேண்டும்**

தூத்துக்குடி: ஒரு ஏக்கர் மூலிகை பயிர் செய்து ஏற்றுமதி செய்யும் போது விவசாயிகளுக்கு அதன் மூலம் ஒரு லட்ச ரூபாய் வருவாய் கிடைக்கும் வகையிலான திட்டத்தை தூத்துக்குடியில் இருந்து மேற்கொள்ள உள்ளோம். இதற்கு நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும் என்று தமிழக அரசு வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலாளர் ஐ.ஏ.எஸ் அதிகாரி சந்தீப் சக்ஸேனா தெரிவித்தார்.தூத்துக்குடியில் மூலிகைப் பயிர்களின் தன்னார்வ சான்றளிப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சியில் சந்தீப் சக்ஸேனா பேசியதாவது;

முதல்வர் உத்தரவுப்படி வேளாண்மைத்துறையில் இரண்டாம் பசுமைப்புரட்சியை உருவாக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளோம். இதில் வேளாண்மை பொருட்களை உற்பத்தி செய்வதோ, அதன் திறனை அதிகரித்தால் மட்டும் போதாது. விவசாயிகளின் வருவாயை 2 மடங்கில் இருந்து மூன்று மடங்காக உயர்த்தி ஆக வேண்டும். அதுதான் இரண்டாம் பசுமைப்புரட்சியின் தாரக மந்திரமாகும்.

தற்போது அதற்கான வேலையை தான் தான் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட அரசு துறைகள் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகிறோம். நமக்கு பாசன வசதி குறைவு. நதிநீர் பாசனம் முழுவதும் பண்ணி முடிந்து விட்டது. பூமியில் இருந்து எவ்வளவு தண்ணீர் எடுத்து பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு எடுத்து முடிந்து விட்டது.இங்கு புஞ்சை நிலம் அதிகம். நஞ்சை நிலம் குறைவு. இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தாலும் விவசாயிகளுக்கு அதிக வருவாயை அளிக்கும் வகையிலான திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்பது தான் அரசு மற்றும் வேளாண்துறையின் நோக்கமாகும்.நெல் அதிகமாக உற்பத்தி செய்து விட்டால் விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்காது. இது போன்று தான் எல்லா பயிர்களின் உற்பத்தி அதிகமாகி விட்டால் போதிய விலை கிடைக்காமல் போய்விடும். இதனால் தான் குறிப்பிட்ட

பயிரை தான் மாற்றி, மாற்றி போடும் நிலையை மாற்றி வேறு பயிர்களை போடுவதற்கு வேண்டிய முயற்சிகளை விவசாயிகளிடம் வலியுறுத்த உள்ளோம். அதே சமயம் அவர்களுக்கு அதன் மூலம் அதிக வருவாய் கிடைக்க வழி செய்ய வேண்டியது நமது கடமையாகும்.தூத்துக்குடி மாவட்டத்தில் மழை குறைவாகத் பெய்கிறது. பாசன வசதியும் ஒரு குறிப்பிட்ட அளவில் தான் உள்ளது.

இதனால் இங்கு எந்த பயிர் உற்பத்தி அதிகம் செய்தால் விவசாயிகளுக்கு அதிக வருவாய் கிடைக்கும் என்று ஆய்வு செய்ததில் மெடிசன் பிளான்ட் இங்கு நன்றாக வருவது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் அதனை ஊக்கப்படுத்தும் வகையில் அரசுத்துறைகள் இணைந்து இம் மாவட்டத்தில் இந்த திட்டத்தை துவக்க முடிவு செய்துள்ளோம்.
உலக அளவில் 60 மில்லியன் யு.எஸ் டாலர் மதிப்பிற்கு தேவை உள்ளது. இதில் இந்தியாவின் பங்கு இரண்டாவது இடத்தில் உள்ளது. அதே சமயம் அதன் மதிப்பில் பார்க்கும் போது நம் நாடு 6வது இடத்தில் தான் உள்ளது. உற்பத்தி அதிகமாக இருந்து ஏற்றுமதி அதிகரித்தாலும் விவசாயிகளுக்கு அதன் மூலம் போதிய விலை கிடைக்கவில்லை.
இதற்கு முக்கிய காரணம் சான்றளிப்பு இல்லாதது தான். இன்றைக்கு உலகம் ஊர் போல் ஆகிவிட்டன. இதனால் தரம், தரத்திற்கான சர்டிபிக்கேஷன் மிக முக்கியமான தேவையாக உள்ளது. இதனால் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு இதற்கான சான்று கிடைக்க செய்து அதன் மூலம் அவர்களது உற்பத்தி பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்கான நடவடிக்கையை தீவிரமாக மேற்கொண்டு வருகிறோம்.ஒரு ஏக்கருக்கு ஒரு லட்ச ரூபாய் வரை விவசாயிகளுக்கு வருவாய் கிடைக்கும் வகையில் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த முயற்சியை தூத்துக்குடியில் இருந்து துவக்கியுள்ளோம். நிச்சயம் இதற்கு நல்ல வெற்றி கிடைக்கும். இந்த பணிக்காக கீழ்மட்டத்தில் இருந்தே பயிற்சி அளிக்க வேண்டிய நிலை உள்ளது. அதனையும் செய்ய உள்ளோம்.இவ்வாறு வேளாண்மை உற்பத்தி ஆணையர் தெரிவித்தார்.முன்னதாக தூத்துக்குடி கோரம்பள்ளத்தில் பொட்டானிக்கல் கார்டன் அமைக்க மாவட்ட கலெக்டர் ஆஷீஷ்குமார் வெள்ளிவிழா ஆண்டில் முடிவு செய்து அதற்கான ஆரம்பகட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறார். அந்த இடத்தையும், அதற்கு வேண்டிய உதவிகளை வேளாண்மைத்துறை செய்ய வேண்டும் என்பதற்காக சந்தீப்சக்ஸேனாவை அந்த இடத்திற்கு அழைத்து சென்று கலெக்டர் காண்பித்தார்.
கலெக்டர் இதில் மிகவும் விருப்பமாக இருப்பதால் அதற்கு வேண்டிய அனைத்து உதவிகளும் செய்யப்படும் என்று வேளாண்மை உற்பத்தி ஆணையர் தெரிவித்ததாக கலெக்டர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## நெற்பயிர் பாதுகாப்பு பயிற்சி வம்பனில் இன்று துவக்கம்

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். மாவட்டம் முழுவதும் இதுவரை, 50 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலில் இருந்து சம்பா நெல் பயிர்களை பாதுகாப்பதற்கான வழிமுறைகள் குறித்து, விவசாயிகளுக்கு இலவச பயிற்சி அளிக்க வேளாண் அறிவியல் நிலையம் முடிவு செய்துள்ளது. வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில், இன்று காலை. 10 மணிக்கு துவங்கவுள்ள பயிற்சி முகாமில் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் அனைவரும் பங்கேற்கலாம்.

## பருத்தி , மஞ்சள் வார சந்தைக்குகள்ளக்குறிச்சியில் குடோன் "ரெடி'

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கத்தில் அடுத்த மாதம் நடக்கவுள்ள பருத்தி, மஞ்சள் வார சந்தைக்காக குடோன் சீரமைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.கள்ளக்குறிச்சி, சின்னசேலம், தியாகதுருகம், கச்சிராயபாளையம், சங்கராபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அதிகளவில் பருத்தி, மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது. அதையொட்டி கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஆண்டுதோறும் பருத்தி மற்றும் மஞ்சளுக்கு தனியாக வார சந்தை நடத்தப்பட்டு வருகிறது.

இங்கு விவசாயிகள் பருத்தி, மஞ்சள் மூட்டைகள் இருப்பு வைக்கவும் குடோன் வசதி உள்ளது. இதனால் கள்ளக்குறிச்சி சுற்று வட்டார பகுதிகள் மட்டுமின்றி பல்வேறு மாவட்டங்களில் இருந்து கள்ளக்குறிச்சி வார சந்தைக்கு விவசாயிகள் வருகின்றனர்.

வார சந்தைகளின்போது பஞ்சு மூட்டைகள் திறந்த வெளியிலேயே வைக்கப்படுவதை தவிர்க்க, கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி மற்றும் மஞ்சளுக்காக 22 லட்சம் ரூபாய் மதிப்பில் புதிய சேமிப்பு கிடங்கு கட்டி திறக்கப்பட்டுள்ளது. பழைய சேமிப்பு கிடங்குகள், பஞ்சு மூட்டைகள் வைப்பதற்கான சிமெண்ட் தரைதளம் போன்ற அனைத்து வகையான சீரமைப்பு பணிகளும் துரிதமாக நடந்து வருகிறது.

## பருவ மழை இல்லாததால் வயல்களில் வெடிப்பு

சின்னசேலம்:சின்னசேலம் சுற்றியுள்ள கிராம பகுதியில் பருவ மழை இல்லாததால் நெல் சாகுபடி செய்ய தயார் செய்யப்பட்ட நிலங்கள் வறண்டு வெடிப்புண்டதால் விவசாயிகள் தவிக்கின்றனர். சின்னசேலம் தாலுகாவில் 85 கிராமங்கள் உள்ளது. விவசாயம் முக்கிய தொழிலாக செய்து வருகின்றனர். இந்த ஆண்டு பருவ மழை பெய்யாததால் கிணற்று பாசனம் மூலம் நெல், கரும்பு, பருத்தி பயிர் செய்தனர். கிணற்று நீர் குறைவாக உள்ள விவசாயிகள் கடந்த மாதம் பெய்த மழை நீரை வைத்து நெல் பயிரிட வயல்களை தயார் செய்தனர். இலைகளை உரமாக்க வயலில் போட்டு

உழுவதற்கு தயாராகினர். அதனை தொடர்ந்து ஒரு மாதமாக பருவ மழை இல்லாததால், நெல் பயிரிட தயார் செய்த நிலங்கள் வறண்டு வெடிப்புண்டது. இதனால் விவசாயிகள் கடும் பாதிப்புக்குள்ளாகினர்.

## நவ.,27ல் மீன் வளர்ப்பு குறித்து பயிற்சி முகாம்

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 27ம் தேதி, மீன் வளர்ப்பில் பண்ணை மேலாண்மை எனும் தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:மீன் வளர்ப்பு பயிற்சியில், வளர்ப்பிற்கான மீன் வகை, மீன் விதைத்தேர்வு, இனப்பெருக்க முறை உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.விவசாயிகள் மற்றும் மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள அனைவரும் பயிற்சியில் பங்கேற்கலாம். பயிற்சியில பங்கேற்க ஆர்வமுள்ளோர், வரும், 26ம் தேதிக்குள், நாமக்கல்- மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது, 04286 - 266244, 266345 ஆகிய ஃபோன் எண்களில் தொடர்பு கொண்டு பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இன்றைய வேளாண் செய்திகள்

21.11.2012 P.M

22.11.2012 A.M

**குன்னூர் ஏலத்தில் டீத்தூள் விலை உயர்வு**



குன்னூர், நவ.22: நீலகிரி மாவட்டம், குன்னூர் கூட்டுறவு ஏல மையத்தில் தேயிலை தூள் ஏல விற்பனை நடைபெற்றது. இலை ரகம் 2 லட்சத்து 19 ஆயிரத்து 557 கிலோ, டஸ்ட் ரகம் 1 லட்சத்து 57 ஆயிரத்து 97 கிலோவும் விற்பனைக்கு வந்தது. உள்நாடு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று தேயிலை தூளை போட்டி போட்டு கொள்முதல் செய்தனர்.

இதனால், தேயிலை தூள் முழுவதும் விற்பனை ஆனது. அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ரூ. 2 முதல் ரூ. 4 வரை விலை உயர்ந்தது. இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ. 80 முதல் ரூ. 86, உயர் வகை ரூ. 78 முதல் ரூ. 101, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.81 முதல் ரூ.89, உயர் வகை ரூ.80 முதல் ரூ.101 வரை விலை கிடைத்தது.

21st nov 2012 P.M

**ஏனாத்தூரில் நாளை வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாம்**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் உழவர் பயிற்சி தலைவர் வெங்கட சுதாகர்ராவ் வெளியிட்டுள்ள அறிக்கை:

காஞ்சிபுரம் அடுத்த ஏனாத்தூரிலுள்ள உழவர் பயிற்சி மையம் சார் பில், வெள்ளாடு வளர்ப்பு

பயிற்சி முகாம் நாளை (22ம்தேதி) நடக்கிறது. இத்தொழில் அதிக லாபம் பெறலாம். எனவே, விருப்பமுள்ள ஆண், பெண் பயிற்சியில் பங்கேற்று பயன்பெறும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு தலைவர், உழவர் பயிற்சி மையம், ஏனாத்தூர்- 631561 மற்றும் 044- 2726 4019 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்
21.11.2012 P.M
22.11.2012 A.M

**உற்பத்தி குறைவு , முகூர்த்தநாள் என்பதால் சேலம் உழவர் சந்தைகளில் காய்கறி விலை கிடுகிடு உயர்வு சின்னவெங்காயம் கிலோ ரூ. 42–க்கு விற்பனை**

உற்பத்தி குறைவு, முகூர்த்தநாள் போன்ற காரணத்தினால் சேலம் உழவர் சந்தைகளில் காய்கறிகளின் விலை கிடு கிடுவென உயர்ந்தது. சின்ன வெங்காயம் கிலோ ரூ.42–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

காய்கறிகள் விலை உயர்வு

சேலம் மாநகரில் சூரமங்கலம், அஸ்தம்பட்டி, அம்மாபேட்டை, தாதகாப்பட்டி என 4 உழவர் சந்தைகள் உள்ளன. சந்தைக்கு விவசாயிகள் தங்களது விவசாய தோட்டத்தில் உற்பத்தி செய்யும் காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். அடுத்தடுத்து தொடர்ச்சியாக வரும் முகூர்த்தநாள், சபரிமலைசீசன், உற்பத்தி குறைவு போன்ற காரணங்களால் உழவர் சந்தைகளில் பீன்ஸ், சின்னவெங்காயம், அவரை, கத்தரிக்காய், கேரட் உள்பட குறிப்பிட்ட சில காய்கறிகள் விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு கிலோ ரூ. 36–க்கு விற்பனை செய்யப்பட்ட பீன்ஸ் நேற்று கிலோ ரூ. 44–க்கு விற்பனை செய்யப்பட்டது.

இதேபோல், கிலோ ரூ. 14–க்கு விற்கப்பட்ட தக்காளி தற்போது ரூ.17–க்கும், கிலோ ரூ. 24–க்கு விற்கப்பட்ட கத்தரிக்காய் ரூ. 32–க்கும், கிலோ ரூ. 30–க்கு விற்கப்பட்ட அவரை ரூ.35–க்கும், கிலோ 24–க்கு விற்கப்பட்ட கேரட் ரூ.30–க்கும், கிலோ 15–க்கு விற்கப்பட்ட வெண்டைக்காய் தற்போது ரூ. 20–க்கும், பெரியவெங்காயம் ரூ. 24–க்கும் விற்பனை செய்யப்பட்டது. வரத்து அதிகமாக இருப்பதால் பச்சமிளகாய் சற்று விலை குறைந்து கிலோ ரூ. 16–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

மேலும் விலை உயர வாய்ப்பு

இது குறித்து அஸ்தம்பட்டி உழவர் சந்தை அதிகாரி ஒருவர் கூறுகையில், தொடர்ந்து மழை பெய்த காரணத்தில் விளைச்சல் பாதிக்கப்பட்டு உற்பத்தியும் குறைந்துள்ளது. இதுதவிர முகூர்த்தநாள்,

சபரிமலை சீசன் ஆகிய காரணங்களினால் பீன்ஸ், தக்காளி, கத்தரிக்காய், சின்னவெங்காயம், அவரை போன்ற குறிப்பிட்ட காய்கறிகளின் விலைகள் உயர்ந்துள்ளது. சின்னவெங்காயத்தின் விலை வெளிமார்க்கெட்டில் ரூ. 50–க்கும், உழவர் சந்தையில் ரூ.42–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. கொத்தமல்லி கட்டு ரூ. 5–க்கு விற்கப்படுகிறது. மேலும் கீரை வகைகள் அனைத்தும் விலை உயராமல் எப்போதும் விற்கப்படும் விலைக்குத்தான் விற்கப்படுகிறது. அதேசமயம் வரும் நாட்களில் இப்போது இருப்பதைவிட காய்கறிகளின் விலை மேலும் உயரவும் வாய்ப்புள்ளது என்றார்.

**பி.ஏ.பி. பாசன பகுதியில் ஒரு மடை விட்டு ஒரு மடை பாசன அளவை 400 ஏக்கராக குறைக்க வேண்டும் கலந்தாய்வுக் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

பி.ஏ.பி. பாசன திட்டத்தில் உள்ள ஒருமடை விட்டு ஒருமடை பாசனத்தின் அளவை 400 ஏக்கராக குறைக்க வேண்டும் என்று கலந்தாய்வுக்கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

**பி.ஏ.பி. திட்டம்**

கோவை, திருப்பூர் மாவட்டத்தில் பரம்பிக்குளம் ஆழியாறு பாசன திட்டத்தில் (பி.ஏ.பி.) சுமார் 3 லட்சத்து 77 ஆயிரத்து 152 ஏக்கர் பாசனம் பெற்று வருகிறது. பாசன பகுதிகள் 4 மண்டலமாக பிரிக்கப் பட்டு தண்ணீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. பருவமழை பெய்யாததால் அணைக்கு நீர் வரத்து குறைந்தது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் பி.ஏ.பி. திட்டத்தில் ஒரு மடை விட்டு ஒரு மடை பாசனம் கடைபிடிக்கப்பட்டு வந்தது. இதில் ஒரு மடை பாசன பகுதி ஆயிரம் ஏக்கர் என்று நிர்ணயிக்கப்பட்டது. இதனால் பயிர்க ளுக்கு போதுமான அளவு தண்ணீர் பாய்ச்சுவதில் சிரமம் ஏற்படுவதாகவும், எனவே ஒருமடை விட்டு ஒருமடை பாசனத்தின் அளவை 400 ஏக்கராக குறைக்க வேண்டும் என்று பாசன சபை தலைவர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் பி.ஏ.பி. திட்டம் தொடர்பாக அரசு உயர்மட்ட குழுவை அமைத்தது. அந்த குழுவினர் பொங்கலூர் வட்டார பாசன சபை தலைவர்கள் மற்றும் விவசாயிகளிடம் கருத்து கேட்கும் கூட்டம் அலகுமலையில் உள்ள திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதற்கு உயர்மட்ட குழு தலைவரான பி.ஏ.பி. கண்காணிப்பு பொறியாளர் திருப்பதி தலைமை தாங்கினார்.

**குளம், குட்டைகளுக்கு...**

கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் பேசும்போது,, 'ஒருமடை விட்டு ஒருமடை பாசனத்தின் அளவை 400 ஏக்கராக மாற்ற வேண்டும், கடைமடை பகுதிக்கு தண்ணீர் சரியாக வருவதில்லை. அதை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். உடுமலை பகுதியில் குளம், குட்டைகளுக்கு தண்ணீர் விடுவதை நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஒரு மடை விட்டு ஒருமடை பாசன திட்டம் கொண்டு வந்ததன் நோக்க மே அடிபட்டு போகும்' என்று தெரிவித்தனர்.

அப்போது, அதிகாரிகள் குழு உயர்மட்ட தலைவரான பி.ஏ.பி. கண்காணிப்பு பொறியாளர் திருப்பதி கூறியதாவது:

சில விவசாயிகள் தண்ணீர் சேதாரத்தை தடுக்க பிரதான வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்கால்களுக்கு குழாய் அமைத்து தண்ணீர் வினியோகிக்கலாம் என்று தெரிவித்தனர்.

ஆனால் இந்த முறையால் நிலத் தடி நீர் மட்டம் உயருமா? என்பதை விவசாயிகள் யோசிக்க வேண்டும். மேலும் ஒருமடை விட்டு ஒரு மடை பாசனத்தின் அளவை 400 ஏக் கராக குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்ப உள்ளோம். உங்களின் கருத்துக்களை ஆராய்ந்து அரசு முடிவு எடுக்கும்.

இவ்வாறு திருப்பதி கூறினார். இதில் பொங்கலூர் வட்டார பாசன சபை தலைவர்கள் கூட்டமைப்பு தலைவர் கோபால் உள்பட பாசன சபை தலைவர்கள் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.